டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

அக்ரி-டாக்டர்

மின்னிதழில் குறைந்த செலவில்
விளம்பரம்
செய்து பயன்பெற
தொடர்புக்கு
80563 05483 • 93602 23193

agridoctor.in | 8.10.2023 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 32 | RNI No.TNTAM/2012/49602 | Vol.11, Issue: 93 - Madurai | Online Edition

# நாட்டிலுள்ள மூன்று கோடி மீனவர்களின் நலனுக்காகவே உருவாக்கப்பட்டது சாகர் பரிக்கிரமா பயணம்

## மத்திய அமைச்சர் பர்ஷோத்தம் ரூபாலா பேச்சு

புது தில்லி, அக்.7

மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சர் பர்ஷோத்தம் ரூபாலா, இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் ஆகியோர் சாகர் பரிக்ரமாவின் 9-வது கட்ட பயணத்தை அக்டோபர் 7-ம் தேதி ராமநாதபுரம் மாவட்டம் தொண்டியில் தொடங்கினர். அதனைத் தொடர்ந்து, புதுக் கோட்டை மாவட்டத்தில் ஜெகதாபட்டினம், தஞ்சாவூர் மாவட்டம் மல்லிபட்டினம் மற்றும் அதிராம்பட்டினம் ஆகிய இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் மீனவர்களின் குறைகளையும் கோரிக்கைகளையும் கேட்டறிந்தனர். அமைச்சர்கள் மீனவர் களுக்கு கிசான் கடன் அட்டைகளையும் வழங்கினர்.

நிகழ்சியில் பேசிய அமைச்சர் பர்ஷோத்தம் ரூபாலா, சாகர் பரிக்கிரமா பயணம் கிட்டத்தட்ட இந்தியாவின் 8000 கிலோமீட்டர் நீளமான கடற்கரையோரம் வசிக்கும் 3 கோடி மீனவர்களை நேரில் சந்தித்து அவர்களை அதிகாரப்படுத்தும் நோக்கில், அவர் களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் பயணமாகும் என்றார்.

இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் பேசுகையில், ஆழ்கடல் மீன்பிடி விசைப்படகின் விலையான 1.2 கோடி ரூபாயில் 60% மானியத்தை மத்திய அரசு வழங்கி வருவதாகவும், மீனவர்கள் அதனைப் பெற்று பயனடைவதாகவும் தெரிவித்தார். நாட்டி லேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் தான் கடல்பாசி பூங்காவுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் பல்வேறு மீனவ கிராமங்களை சேர்ந்த மீனவர்கள், மீனவ சங்க உறுப்பினர்கள், மீன் விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம், ஜெகதாபட்டினத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் மெர்சி ரம்யாவும் கலந்து கொண டார். மீனவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்த அமைச்சர்கள், அதனைத் தொடர்ந்து மணல்மேல்குடியில் புதிதாக அமைக்கப் பட்டுள்ள மீனவர்கள் மற்றும் மீன் விவசாயிகளின் கூட்டுறவு சங்கக் கிளையை தொடங்கி வைத்தனர்.



தஞ்சாவூர் மாவட்டத்தில் மல்லிபட்டினம் மற்றும் அதிராம் பட்டினம் ஆகிய இடங்களில் நடைபெற்ற மீனவர்களின் கோரிக்கைகளை கேட்டறியும் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் தீபக் ஜேக்கப் கலந்து கொண்டார்.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள 34 மீனவ கிராமங்களை சேர்ந்த மீனவர்கள் தங்களுக்கு மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களுக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். நிகழ்ச்சியில் மீன்வளத்துறை இணைச் செயலாளர் நீத்து பிரசாத்தும் கலந்து கொண்டார்.

முன்னதாக நேற்று காலை திருவாடானை கிராமத்தில் பாரம் பரிய மீனவர் இல்லத்தில் மீனவர்களுடன் அமைச்சர்கள் காலை உணவருந்தினார்கள்.

நாகப்பட்டினம் மாவட்டம், செருதூர் மீனவ கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர்கள் பிரதமரின் மத்ஸய சம்பதா திட்டத்தின் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

நாகப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகளில் மீனவர்களுடன் அமைச்சர்கள் கலந்துரை யாடினர். மாலையில் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் காரைக் காலில் நடைபெறும் நிகழ்ச்சியில் துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜனும் கலந்து கொண்டு மீனவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# இயற்கை வேளாண்மை குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி

மதுரை, அக்.7

மதுரை மாவட்டம். தே.கல்லுப்பட்டி வட்டாரம், வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் P.முத்துலிங்காபுரம் கிராமத்தில் இயற்கை வேளாண்மை குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியினை வட்டார ஒருங்கிணைப்பாளர் மா.விமலா, தலைமையேற்று தொடங்கி வைத்து, இயற்கை வேளாண் மையின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளிடம் விளக்கி கூறினார்.




இயற்கை வேளாண்மையில் முன்னோடி விவசாயி சதுரகிரி பஞ்சகாவ்யா, ஜீவாமிர்தம், அமிர்த கரைசல், மீன் அமிலம் போன்ற இயற்கை மருந்துகளை எவ்வாறு தயாரிப்பது என்று விவசாயிகளிடம் விளக்கி கூறினார். P.முத்துலிங்காபுரம் பகுதி உதவி வேளாண்மை அலுவலர் ராதாகிருஷ்ணன், இயற்கை பூச்சி விரட்டிகள் தயாரிப்பு முறைகளை செயல் விளக்கமாக விவசாயிகளின் பார்வைக்கு செய்து காண்பித்தார்.

இப்பயிற்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் தே.கல்லுப்பட்டி வட்டார தொழில் நுட்ப மேலாளர் ஹேமலதா நன்றி தெரிவித்தார். இப்பயிற்சியில் 40 விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பா.மாரிமுத்து மற்றும் கா.ஜெகன்பாண்டி செய்திருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


HEALTHY CROPS HAPPY FARMER
SATHYAM Agro Clinic
QUALITY PRODUCT
சத்யம் அக்ரோ கிளினிக்
விதை முதல் விற்பனை வரை
வேளாண் மருத்துவ மையம்
சத்யம் விவசாயிகள் கிளப்
SATHYAM FARMERS CLUB
விதை முதல் விற்பனை வரை
விவசாயத்திற்கு தேவையான அனைத்தும் ஒரே இடத்தில்
சத்யம் அக்ரோ கிளினிக்
சத்யம் விவசாயிகள் கிளப் சிறப்பம்சங்கள்
• பயிர்களுக்கேற்ப மாதம் ஒருமுறை அல்லது இருமுறை கள ஆய்வு
• விற்பனை விலையிலிருந்து 50% விலை குறைந்து கொடுக்கப்படும்.
• காலை 10 மணிமுதல் மாலை 6 மணி வரை விவசாய ஆலோசனை வழங்கப்படும்.
• உரமிடுதல் பணியில் விவசாய பணியாளர் கூலியில் 50% பங்களிப்பு.
• விவசாய நிலங்களுக்கு இலவச மண் மற்றும் நீர் பரிசோதனை.
• விளைபொருட்களை அறுவடை செய்ய உதவி.
• விளைபொருட்கள் நியாயமான விலையில் கொள்முதல் செய்யப்படும்.
SATHYAM GROUP OF COMPANIES
Corporate Office : Ellis Nagar, Madurai - 625 016, Tamilnadu, India.
Unit - 1: Melamathur, Madurai - 625 234, Tamilnadu, India.
Unit - 2: Vadipatti, Madurai - 625 218, Tamilnadu, India.
For More Details Contact us: +91 75508 75508
Mail us : sales@sathyamagroclinic.com
www.sathyamagroclinic.com

# சேலம் மாவட்டத்திற்கான வேளாண் வானிலை முன்னறிவிப்பு

சேலம், அக்.7

இன்று முதல் 11.10.23 வரையிலான நாட்களில் நிலவக்கூடிய வேளாண் சார்ந்த வானிலை முன்னறிவிப்பினை சேலம் மாவட்டம், சந்தியூர், வேளாண்மை அறிவியல் நிலையம், மாவட்ட வேளாண் வானிலை மையத்தை (ம்புனிஷ்) சார்ந்த இரா.ஜெகதாம்பாள், சி.பிரதிபா, மா.இரவி மற்றும் செ.பிரபாகரன் ஆகியோர் தெரிவித்ததாவது,

| Date | Rainfall (mm) | Temp Max (°C) | Temp Min (°C) | Humidity I (%) | Humidity II (%) | Wind Speed (kmph) | Wind Direction (Degree) | cloud cover (Octa) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7.10.23 | 5.0 | 36.0 | 22.0 | 80 | 50 | 3 | 180 | 7 |
| 8.10.23 | 15.0 | 36.0 | 22.0 | 80 | 50 | 3 | 180 | 7 |
| 9.10.23 | 50.0 | 35.0 | 21.0 | 88 | 60 | 3 | 180 | 8 |
| 10.10.23 | 50.0 | 35.0 | 21.0 | 88 | 60 | 2 | 200 | 8 |
| 11.10.23 | 45.0 | 35.0 | 21.0 | 88 | 60 | 4 | 200 | 8 |

● இந்திய வானிலை துறையின் முன்னறிவிப்பின்படி, வரவிருக்கும் நாட்களில் முன்னறிவிப்பின்படி, வரும் நாட்களில் மிதமான மலை முதல் கனமழை பெய்யும் என்றும் மற்றும் சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 35 முதல் 36 டிகிரி செல்சியஸ் மற்றும் 21 முதல் 22 டிகிரி செல்சியஸ் வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. காலை ஈரப்பதம் 80 முதல் 88% ஆகவும், மாலை ஈரப்பதம் 50 முதல் 60% ஆகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தென் மேற்கு திசையில் இருந்து மணிக்கு 2-3 கிமீ வேகத்தில் காற்று வீசக்கூடும். வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

● லேசான முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது, வடிகால் வசதி அமைக்கவும், நீர்ப்பாசனம் மற்றும் ரசாயனங்கள் தெளிப்பதைத் தவிர்க்கவும். நிலத்தடி நீர்மட்டத்தை மேம்படுத்த பண்ணைக் குட்டைகள் அல்லது பொருத்தமான கட்டமைப்பு களைப் பயன்படுத்தி மழைநீரை அறுவடை செய்யவும். நிலவும் மழையைப் பயன்படுத்தி மானாவாரி நிலப் பயிர்களான உளுந்து, கம்பு மற்றும் பிற பயிர்களை விதைக்கலாம். பயிரை விதைப்பதற்கு முன் டிரைக்கோடெர்மா விரிடி @ 4g அல்லது

சூடோமோனாஸ் ஃப்ளோரசன்ஸ் @ 1g/kg அல்லது பேசில்லஸ் சப்டிலிஸ் கொண்டு விதை நேர்த்தி செய்வதன் மூலம் வேர் அழுகல் நோய்களின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தலாம். விவசாயிகள் விதைப்பு அல்லது சாகுபடிக்கு முன் மண் பரிசோதனை செய்ய வேண்டும். மண் பரிசோதனை அறிக்கை யின் அடிப்படையில் உரம் இடுவதன் மூலம் மண்ணின் ஆரோக்கியத்தை காக்க முடியும். மழைக்காலங்களில் மாடு களின் கொட்டகை சுத்தமாகவும், தண்ணீர் தேங்காதவாறும் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

● மாடுகளில் மடி நோய் உண்டாவதை தடுக்க பொட்டாசியம் பர்மாங்கனேட் பால்கறப்பதற்கு முன்பும்,பின்பும் கிருமிநாசினி கலந்து தண்ணீரில் மடி மற்றும் பால் கறப்பவரின் கைகளை சுத்தம் செய்ய வேண்டும்.

● மஞ்சளில், தொடர் மழை மற்றும் நீர் தேக்கத்தின் காரண மாக சத்து குறைபாடு மற்றும் கிழங்கு அழுகல் ஏற்படலாம்.




எனவே சரியான வடிகால் அமைத்து பயிர் சேதத்திலிருந்து காப்பாற்றவும்.

● மரவள்ளிக்கிழங்கில் நீர் தேங்குவதையும், வேர் மற்றும் கிழங்கு அழுகுவதையும் தவிர்க்க வடிகால் வசதிகளை ஏற்படுத்தவும்.

● தொடர்ந்து மழை பெய்து வருவதால் நீர் தேங்குவதால் தென்னையில் அடித்தண்டு அழுகல் நோய் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே சரியான வடிகால் வசதியை ஏற்படுத்தி, நல்ல மகசூலைப் பெற தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குவதை உறுதி செய்யவும்.

● நாட்டுக்கோழிகளை ஆழ்கூள முறையில் கொட்டகையில் வளர்க்கும்போது ஆழ்கூளம் (கடலைப்பொட்டு, நெல் உமி) போன்றவை நனைந்து கெட்டியாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆழ்கூளம் அதிக ஈரப்பதத்துடன் காணப்பட்டால்

சுண்ணாம்புத்தூளை தூவி கிளறிவிட வேண்டும். இதனால் ஆழ்கூளத்தின் ஈரப்பதம் குறைவதுடன், சுண்ணாம்புத்தூள் கிருமி நாசினியாகவும் செயல்பட்டு கோழிகளில் நோய் பரவுவதை தடுக்கிறது.

● மழை காலங்களில் இளம் கோழிக்குஞ்சுகளை அடை காப்பானில் வைத்து வளர்க்கும் பொது 4 முதல் 5 வாரங்களுக்கு ஒரு கோழிக்குஞ்சுக்கு 2 வாட் வீதம் செயற்கை வெப்பம் அளிக்க வேண்டும்.கோழிப்பனைகளில் சாரல் மழையினால் ஈரம் உண்டாவதை தடுக்க பண்ணையின் பக்கவாட்டில் தார்பாலின் / சில்பாலின் பைகளை கட்டி தொங்கவிடவும்.

● வேர் அழுகல் நோயைத் தவிர்க்க வயலில் தேங்கும் அதிகப்படியான தண்ணீரை வெளியேற்றுவதற்கான கட்டமைப்புகளை வழங்கவும்.

இதனை, திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம் (KVK), சந்தியூர், சேலம் - 636 203, 0427 - 2422550 தெரிவித்தார்.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# புதூர் கிராம விவசாயிகளுக்கு சிறுதானிய சாகுபடி பயிற்சி



புதுக்கோட்டை, அக்.7

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் வட்டாரம், வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமையின் வாயிலாக செயல்படுத்தப்படும் மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் (2023-2024) விவசாயிகள் பயிற்சியானது கலைஞரின் அனைத்து




கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டக் கிராமமான புதூர் கிராமத்தில் சிறுதானியங்கள் சாகுபடி தொழில் நுட்பங்கள் என்ற தலைப்பில் நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு அன்னவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பொறுப்பு க.வெற்றிவேல், வழிகாட்டுதலின்படி வேளாண்மை அலுவலர் எம்.மோனிகா, தலைமை வகித்து விவசாயிகளை வரவேற்று நடப்பாண்டு வேளாண்மை துறையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மானியங்கள், விதைகள், உரங்கள் இருப்பு விபரங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். அதனை தொடர்ந்து குடுமியான் மலை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மைய இணை பேராசிரியர் முனைவர் எம்.சண்முகநாதன், சிறுதானிய பயிர்களான கேழ்வரகு, கம்பு, சோளம், தினை, சாமை, குதிரைவாலி,

வரகு ஆகிய பயிர்களின் குணாதசியங்கள், பயன்கள் மற்றும் சாகுபடி முறைகள் குறித்தும் மனிதர்களுக்கு சிறு தானியங்களின் முக்கியத்துவம், சிறுதானிய பயிர் சாகுபடியில் நிலம், நீர், ஒருங்கிணைந்த முறையில் உர மேலாண்மைகள், உள்;ர் மற்றும் உயர் விளைச்சல் இரகங்களின் பயன்பாடுகள் குறித்தும் விவசாயிகளுக்கு விரிவாக பயிற்சியளித்து விவசாயிகள் கேட்கப்பட்ட சந்தேகங்களுக்கு விரிவாக விளக்கமளித்தார்.

அதனை தொடர்ந்து உதவி வேளாண்மை அலுவலர், அருண்மொழி அவர்கள் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டங்களின் நோக்கங்கள், திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் மானியங்கள் குறித்தும் எடுத்துரைத்தார். பயிற்சிக்கு முன்னதாக அன்னவாசல் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சி.ரவிராஜன் வரவேற்று உழவன் செயலியில் அம்சங்கள் அதன் பயன்பாடுகள் குறித்து விளக்கமளித்தார். முடிவில் அன்னவாசல் உதவி தொழில்நுட்ப மேலாளர் சை.நவாப்ராஜா நன்றி கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் ஆ.சக்திவேல், மற்றும் அட்மா திட்ட அலுவலர்கள் செய்து கலந்து கொண்டார்கள். இப்பயிற்சியில் புதூர் அதனை சார்ந்த குக்கிராமங்களை சேர்ந்த 40 விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.



# வேலூர் மாவட்டத்திற்கான வானிலை முன்னறிவிப்பு

வேலூர், அக்.7

வேலூர் மாவட்டத்தில் வரும் 11ம் தேதி வரையிலான நாட்களில் மிகவும் லேசான மழை முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 33 முதல் 34 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 25 முதல் 26 டிகிரி செல்சியஸ் ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 84 முதல் 86 விழுக் காடாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 74 முதல் 76 விழுக் காடாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேக மானது மணிக்கு 3 முதல் 4 கி.மீ வரை தென்கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**பொதுவான ஆலோசனைகள்**

- மழைக்காலமாக இருப்பதால் காய்கறிப்பயிர்களில் வேர் மூலம் பரவும் நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனை கட்டுப் படுத்த முறையான வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டும். மேலும் செடிகள் சாயாமல் இருக்க ஊன்றுகோல் அமைக்க வேண்டும்.
- அறுவடைக்கு தயாராக உள்ள பயிர்களை அறுவடை செய்து பாதுகாப்பான இடங்களில் சேமித்து வைக்க வேண்டும்.
- வரும் நாட்களில் மிகவும் லேசான மழை முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. எனவே பயிர்கள் பாதிப்படை யாமல் இருக்க வடிகால்வசதி அமைக்க வேண்டும்.
- நிலக்கடலை அறுவடைக்கு பிறகு உழவு செய்யும் விவசாயிகள், ஒரு கிலோ டிரைகோடெர்மா விரிடியை 50 கிலோ தொழு உரத்துடன் கலந்து மண்ணில் இட வேண்டும். இவ்வாறு இடுவதால் மண் மூலம் பரவும் நோய்களை முன்கூட்டியே கட்டுப்படுத்தலாம்.

**வேளாண் ஆலோசனைகள்**

**நெல்**

- அறுவடைக்கு தயாராக உள்ள நெற்பயிர்களை அறுவடை செய்து பாதுகாப்பான இடங்களில் சேமித்து வைக்க வேண்டும்.
- சம்பா பருவ சாகுபடி செய்யும் விவசாயிகள் கடந்த வாரம் பெய்த அல்லது எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி நிலம் தயார் செய்யலாம்.

**நிலக்கடலை**

● அறுவடைக்கு தயாராக உள்ள நிலக்கடலையை அறுவடை செய்து பாதுகாப்பான இடங்களில் சேமித்து வைக்க வேண்டும்.

● மேலும் தாழ்வான இடங்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டும்.

**வாழை**

● நல்ல காற்றோட்ட வசதியை உறுதி செய்ய காய்ந்த மற்றும் வளைந்த இலைகளை அகற்ற வேண்டும். மேலும் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு ஊன்றுகோல் அமைக்க வேண்டும்.

**தென்னை**

● தென்னையில் சுருள் வெள்ளை ஈக்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த மஞ்சள் நிற ஒட்டும் பொறிகள் (நீளம் 5 அடி x அகலம் 1.5 அடி) ஏக்கருக்கு 10 வீதம் 6 அடி உயரத்தில் வைக்க வேண்டும்.




**கால்நடை ஆலோசனைகள்**

● மழை நீர் மற்றும் வெள்ளத்திலிருந்து கால்நடைகளை காக்க உயரமான இடத்தில் கட்டி வைக்க வேண்டும்.

● பண்ணையின் மேற்கூரையில் மழைநீர் ஒழுகாதவாரு பாதுகாக்க வேண்டும்.

● ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்ய வேண்டும்.

● கோழிப்பண்ணையை சுற்றி மழைநீர் வடிகால் வசதி அமைக்க வேண்டும்.

● கோழி கொட்டகை மழையில் ஒழுங்காதவாறு படுதா போட்டு மூட வேண்டும். மேலும் ஆழ்கூளம் ஈரமாகாமல் இருக்க மணலுடன் சுண்ணாம்புத்தூள் கலந்து உலர்ந்த நிலையில் பராமரிக்க வேண்டும்.

**தகவல் : திட்ட ஒருங்கிணைப்பாளர், முனைவர் அ.திருமுருகன், வேளாண் காலநிலை தொழில் நுட்ப வல்லுநர், கு.ராதிகா மற்றும் வானிலை கண்காணிப்பாளர், சா.டேவிட்.**

மேலும் விவரங்களுக்கு, திட்ட ஒருங்கிணைப்பாளர், மாவட்ட வேளாண் வானிலை மையம், வேளாண் அறிவியல் நிலையம், விரிஞ்சிபுரம், வேலூர் மாவட்டம் – 632 104. தொலைபேசி எண் : 0416 2900142.

# மரங்களே நம்முடைய எதிர்கால முதலீடு!



தற்போது அனைத்து வட்டாரத்திலுள்ள வேளாண்மைத் துறை மூலமாக விவசாயிகளுக்கு தேக்கு, மகாகனி, செம்மரம், வேங்கை, குமிழ், சவுக்கு மரங்கள் பட்டா நிலங்களில் நட இலவசமாக வழங்கபடுகின்றது நம் அறிந்ததே.






புரட்டாசி மூன்றாம் சனியில் இருந்து வடகிழக்கு பருவமழைக் கான வாய்ப்பு உள்ளது. பயறு, பருத்தி, சிறு தானி யங்கள் விதைப்பு பணி நடைபெற்று வருகிறது. இந்த கால கட்டத்தில் அதுவும் இலவசமாக கிடைக்கின்ற மரங்களை நட்டு பாரமரித் தால் எதிர்காலத்துல நம்முடைய சந்ததிகளுக்கு சிறந்த முதலீடாக (FIXED DEPOSIT) போல உதவிட கூடும், எனவே அனைத்து விவசாயிகளும் சாகுபடி செய்யப்பட்ட அல்லது செய்யப்போகும் நிலங்களில் தனி பயிராக, ஊடு பயிராக வரப்பு ஓர பயிராக மரங்களை நட்டால் நாமும் உயர்வதுடன் நம்முடைய சுற்றுப்புற சூழுலும் பாதுகாக்கப் படும். மரங்கள் கார்பன் டை ஆக்சைடு சுவாசித்து, ஆக்ஸிஜனை வெளியிடுவ தால் சுவாசிக்க சுத்தமான காற்று கிடைக்கிறது.

**முதலில் மரங்களை பற்றி தெரிந்து கொள்ளுவோம்.**

1) தேக்கு இதன் அறிவியல் பெயர் (TECTONA GRANDIS). இது மரங்களின் இராஜா என்று செல்லமாக அழைக்கப்படு கின்றன. அதிகமாக வருமானம் தரக்கூடியவை. இன்றைய நிலையில் தங்கத்தின் விலைக்கு நிகராக மரங்களின் விலையும் உயர்ந்து கொண்டே இருக்கிறது. விவசாய நிலத்தில் ஒரு முறை நட்டு சரியான முறையில் பாரமரித்தால் 10 முதல் 15 ஆண்டுகளில் 50 லட்சம் முதல் 1 கோடி வரை வருமான பார்க்கக் கூடிய மர விவசாயம் உள்ளது. ஒரு வருடம் முதல் இரண்டு வருட மரம் 15 முதல் 20 அடி வரை வளரும்.

2) மஹாகனி (SWIETENIA MACROPHYLLA). இந்த மரம் வெளிபுறத் தோற்றத்தில் மா மரம்' போன்று இருக்கும். இந்த மரம் கப்பல் மற்றும் விமானத்தின் ஓட்டு பலகை செய்வதற்கும் இசைக்கருவிகள் செய்ய பயன்படுகின்றன. 10-12 ஆண்டில் சுமாராக 60 அடி முதல் 65 அடி வரை வளர்ந்து, மரத்தின் சுற்றளவு 3-5 அடி அடைகிறது. ஏக்கருக்கு 1 கோடி வரை வருமானம் கிடைக்கக்கூடியது.


3) செம்மரம் - சிவப்பு சந்தனமரம் (PTEROCARPUS SANTALINUS) என்ற தாவரயியல் பெயர் கொண்ட இந்த மரம் அணு கதிர் வீச்சை தடுக்கும். பல அணு உலைகளில் (கூடன்குளம்) வரும் கதிர்வீச்சை தடுக்க பயன்படுகின்றன. மருத்துவ குணம் உள்ளது. இதனுடைய பட்டைகளை இடித்து கசாயம் தயாரிக்கப் படுகிறது. இதைக் குடித்தால் நாள்பட்ட சீதபேதி குணமாகும். அத்துடன் ஒலி அலைகளை தடுக்கும் (SOUNDS WAVES) திறன் கொண்டது. இம்மரங்கள் வெப்பத்தை அதிகளவில் கடத்தாது. இவ்வாறான சிறப்புகளை இம்மரம் பெற்று இருப்பதால் இவற்றின் சந்தை மதிப்பு (MARKET VALUE) நாளுக்கு நாள் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தெரிகிறது.

4) வேங்கை மரம் (PTEROCARPUS MARSUPINUM) இது தேக்கிற்கு அடுத்த தரமான மரமாக கருதப்படுகின்றன. 15-18 மீட்டர் உயரம் வரை வளரும். வறட்சி தாங்கி வடிகால் வசதியுள்ள இடங்களில் வளரும். வேங்கை மரப் பிசின் வயிற்று நோய்க்கு சிறந்த மருந்தாகும். 4M × 4M இடைவெளியில் ஒரு ஏக்கருக்கு 250 மரக்கன்றுகளை நடவு செய்யலாம். 10 ஆண்டிலே இதன் மூலமாக 1 கோடி வரை வருமானம் கிடைக்கும்.

5) குமிழ் மரம், குறைவான காலத்துல வளரக்கூடியது. இது ஆணி வேர் தாவரம் என்பதால் பக்க வேர்கள் அதிகமாக வளராது.

இதனால் குறைவான இடைவெளியில் அதிக மரங்களை நடலாம். 15 அடிக்கு 15 அடி இடைவெளியில் நடலாம். இதனுடைய தாவரயியல் பெயர் மெலெனா ஆர்போரியா. தீப்பெட்டி, தீக்குச்சி தயாரிக்க பயன்படுவதால் இதனுடைய தேவை அதிகமாகும். பிளைவுட் தயாரிக்க பயன்படுகிறது.

6) சவுக்கு (GREVILLEA ROBUSTA) இது வெளிநாட்டு வரவு இது இந்தியாவில் 1668ல் தான் அறிமுகம் செய்யப்பட்டது. இது நீர்பிடிப்பு உள்ள இடங்கள் கடலோர பகுதியில் செழிப்பாக வளரும் காகித தொழிலுக்கு இது பயன்படுவதால் பேப்பர் தயாரிக்க கம்பெனிகள் ஒப்பந்த சாகுபடியில் செய்யபடுகின்றன. சவுக்கு விரைவாக வளரும் இயல்புடையது. பசுமை மாறா அழகிய தோற்றத்துடன் கூடிய ஊசியிலை கொண்ட தாவரம் இது 4ஷ 4 அடியில் நடுவது சிறந்தது. சவுக்கின் இலைகள், களிகள் (சவுக்கு கம்பு) பந்தல் போடுவதற்கும் காற்று தடுப்பான பயன்படுகிறது.




எனவே விவசாயிகள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி மரங்களை நடுவோம், மழை பெறுவோம் பண்டைய புலவர் கணியன் பூங்குன்றனார் பாடிய நற்றிணைப் பாடலுக்கேற்ப (மரம் சா மருந்து கொள்ளார்) மரங்களை நடுவோம் மரப்பயிரும் ஓர் பணப்பயிரே என்ற மனநிலையில் மரங்களை நட்டு வருங்கால தலைமுறைக்கு முதலீட்டுக்கான உறுதியை ஏற்படுத்துவோம்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பெருந்துறை வட்டாரத்தில் சிறுதானிய சாகுபடி குறித்த விழிப்புணர்வு பேரணி




ஈரோடு, அக்.7

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டாரத்தில் வேளாண்மை - உழவர் நலத்துறையின் மூலம் சிறுதானிய சாகுபடி தொழில் நுட்பங்கள் மற்றும் சத்துமிகு சிறுதானிய உணவுகளின் நன்மைகள் குறித்த நடமாடும் வாகன விழிப்புணர்வு பிரச்சாரம் பெருந்துறை மற்றும் அதன் சுற்று வட்டார கிராமப் பகுதிகளில் நடைபெற்றது. இந்த விழிப்புணர்வு பிரச்சாரத்தை பெருந்துறை வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) சி.சசிகலா, தலைமை தாங்கி, விழிப்புணர்வு பிரச்சார வாகனங் களை கொடியசைத்து துவக்கி வைத்தார். அவர் சிறுதானியங்களின் சாகுபடி குறிப்பு மற்றும் சிறுதானிய உணவுகளை உண்பதால் உண்டாகும் நன்மைகள் பற்றிய துண்டுப்பிரசுரங்களை விவசாயி களுக்கும், பொதுமக்களுக்கும் கொடுத்து நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கம் சார்பில் நடைபெற்ற இப்பிரசாரத்தில் சோளம், கம்பு, இராகி, திணை மற்றும் குதிரைவாலி உள்ளிட்ட சிறுதானியப் பயிர்கள் சாகுபடி செய்வதால் கிடைக்கும் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. சிறுதானியங்களை குறைந்த மண் வளம் உள்ள இடங்களில் சாகுபடி செய்யலாம். மேலும் வறட்சியை தாங்கி வளரக்கூடிய இப்பயிர்களுக்கு பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல் மிகக் குறைவாக இருக்கம். புரத சத்துகள், கால்சியம், பாஸ்பரஸ், இரும்புசத்துகள் மற்றும் இரத்தசோகை நோய் போன்ற பிரச்சனைகளிலிருந்து விடுபட முடியும். பெருந்துறை மற்றம் அதனை சுற்றியுள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் நடமாடும் பிராச்சார வாகனங்கள் மூலம் துண்டுப் பிரசுரங்கள் வழங்கி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் சிறுதானிய சாகுபடி மற்றும் சிறுதானிய உணவுகளின் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பெருந்துறை வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) சி.சசிகலா மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் அட்மா திட்ட பணியாளர்கள், விவசாயிகள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி



இராமநாதபுரம், அக்.7

இராமநாதபுரம் மாவட்டம், உச்சிப்புளி வட்டார வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் கலைஞரின் அனைத்து கிராம ஒருங் கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமமான தாமரைகுளத்தில் மானாவாரி மேம்பாட்டு இயக்கம் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த தலைப்பில் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் எம்.கே.அமர்லால், வேளாண்மை உதவி இயக்குநர், திருப்புல்லாணி. ஒருங்கிணைந்த பண்ணையத்தில் மண்வளம், மண்வள மேலாண்மை, உரம் மேலாண்மை மற்றும் உழவன் செயலியின் நன்மைகள், வேளாண்மை துறையின் மானிய திட்டங்கள் குறித்து விளக்கம் அளித்தார். வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் வள்ளல் கண்ணன், இந்த மாவட்டத்திற்கு ஏற்ற ஒருங்கிணைந்த பண்ணையம் செயல்படுத்துவது குறித்தும், மீன் வளர்ப்பு பற்றியும், ஆடு, மாடு, கோழி மற்றும் புறா வளர்ப்பு பற்றியும், மண்புழு உரம் உற்பத்தி, மரக்கன்றுகள் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு பற்றியும், அசோலா உற்பத்தி மற்றும் தீவன பயிர்களின் முக்கியத்துவம் பற்றியும், ஒருங்கிணைந்த பண்ணையம் மேற்கொள்வதால் ஏற்படும் பயன்கள் பற்றியும் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனை வழங்கினார். சிறப்பு விருந்தினராக உழவர் பயிற்சி மைய வேளாண்மை துணை இயக்குநர் முருகேசன், கலந்து கொண்டு ஒருங்கிணைந்த பண்ணையத்தின் மூலம் விவசாயிகள் தங்கள் வருமானத்தை இரு மடங்காக உயர்த்தி உற்பத்தி திறனை அதிகரிக்க வேண்டும் என்று விவசாயிகளிடம் விளக்கினார். க.கலைவாணி, உச்சிப்புளி, வேளாண்மை அலுவலர், ஒருங்கிணைந்த பண்ணையத்தில் நுண்ணூட்டத்தின் பயன்பாடு மற்றும் உயிரி உரம் மற்றும் பசுந்தாள் உரத்தின் பயன்பாடுகள் பற்றி எடுத்து கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை தொழில்நுட்ப மேலாளர் மா.பவித்ரன் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் முகம்மது யூசுப் செய்திருந்தனர்.

இப்பயிற்சியில் 40 விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிற்சியின் முடிவில் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கான வேளாண் வானிலை முன்னறிவிப்பு

திருச்சி, அக்.7

இன்று முதல் 11.10.23 வரையிலான நாட்களில் மிதமான முதல் கனமான மழை வரை எதிர்பார்க்கப்படுகிறது. சராசரி ஈரப்பதம் (காலை & மாலை), அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை முறையே (84.0% & 66.0%), 36°C மற்றும் 26°Cஎன எதிர்பார்க்கப்படுகிறது. மழை பொழியக்கூடிய மேகங்கள் ஆங்காங்கே காணப்படும். காற்றின் வேகம் சராசரியாக மணிக்கு 13 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். தெற்கு அல்லது தென்மேற்கு திசையில் காற்று வீசக்கூடும். நிலவும் தகுந்த வானிலையினைப் பயன்படுத்தித் சம்பா நெல் நடவினைத் தொடரலாம். அதிக காற்றின் காரணமாக இலைகள் ஒன்றுடன் ஒன்று உரசி இலை நுனிகளில் கருகல் ஏற்படலாம். இதற்கு எந்த மருந்தும் தெளிக்க வேண்டியதில்லை.

வரும் நாட்களில் மிதமான முதல் பலமான காற்று எதிர்பார்க்கப் படுவதால் உழவர்கள் சவுக்கு குச்சிகளை பயன்படுத்தி வாழை பயிர்களுக்கு முட்டு கொடுக்கவும் கறவை மாடுகளை ஐந்து முதல் எட்டு நிமிடங்கள் வரை நன்றாக கறந்து விட வேண்டும். இதனை பின்பற்றுவதன் மூலம் ஆக்ஸிடாக்சின் ஹார்மோன் சுரப்பு சீராக இருக்கும். மேலும் மடிவீக்க நோய் வராமல் தடுக்க இயலும். வெள்ளாடுகளை விட செம்மறியாடுகளையே அதிகம் தாக்குகிறது. உதடு, மூக்கு, கண் இமை, காது, காலின் அடிப்பகுதி, மடி, இனப் பெருக்க உறுப்பு போன்ற இடங்களில் முத்துப்போன்ற அம்மைக் கொப்புளங்கள் காணப்படுதல் காய்ச்சல், உணவு உட்கொள்ளாமை போன்ற பிரச்சனைகள் ஏற்படும். செம்மறியாடுகளுக்கான தடுப்பூசி 3 – 6 மாத வயதில் ஆண்டுக்கு ஒரு முறை செலுத்த வேண்டும். ஒருங்கிணைந்த முறையில் வளர்க்கப்படும் கோழிகளில் பேன் போன்ற புற ஒட்டுண்ணிகள் இருந்தால் ப்யூடாக்ஸ் (1 லி நீரில் 1 மி.லி ப்யூடாக்ஸ் கரைசலை) பஞ்சில் நனைத்துத் கண், செவி மடலில் படாதவாறு சூரிய ஒளி மிக்க நாளில் தடவி விட வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு மேகதூட் செயலியை பதிவிறக்கம் செய்யுங்கள் என திருச்சிராப்பள்ளி, சிறுகமணி, வேளாண்மை அறிவியல் நிலையம், மாவட்ட வேளாண் வானிலை மையத்தினை (DAMU) சேர்ந்த திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ப முரளி அர்த்தநாரி, வேளாண் காலநிலையியல் துறை தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் வே குகன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.



MICRONOL®
ISO 9001 : 2015
வாழையில்
வளமான
மகசூலுக்கு
MICRONOL
MULTI MICRONUTRIENT FERTILIZERS B-10
BANANA
TURMERIC
GINGER
For Agriculture Use only
SOIL APPLICATION
MICRONOL
AGRIYA Plus
SOIL CONDITIONER FOR ALL CROPS
Ca + Mg + S
MICRONOL
MICRONOL
VC
மைக்ரோனால் LCM B-10
(மண்ணில் இடும் உரம்)
அக்ரியா ப்ளஸ்
(மண்ணில் இடும் உரம்)
மைக்ரோனால் VC
(இலைவழித் தெளிப்பு)
LINGA CHEMICALS
Customer Care:
0452 - 2321722

# தென்னையில் அறிவியல் சாகுபடி தொழில்நுட்பம் மற்றும் மதிப்பு கூட்டல் குறித்து கருத்தரங்கு



விருதுநகர், அக்.7

தென்னை வளர்ச்சி வாரியம் மற்றும் தமிழ்நாடு அரசு வேளாண்மை துறையும் இணைந்து விருதுநகர் மாவட்ட தென்னை விவசாயிகளுக்கு தென்னையில் அறிவியல் சாகுபடி தொழில்நுட்பம் மற்றும் மதிப்பு கூட்டல் குறித்து கருத்தரங்கு ஸ்ரீவில்லிபுத்தூர்




வட்டாரத்தில் உள்ள லட்சுமி நாராயணா மஹாலில் வைத்து நடைபெற்றது. இதில் ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் வத்திராயிருப்பு பகுதியை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சியில் தென்னை வளர்ச்சி வாரியத்தின் இயக்குனர் அறவாழி, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இந் நிகழ்ச்சியில் ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் தனலட்சுமி, வரவேற்புரை ஆற்றினார்.

விருதுநகர் வேளாண்மை இணை இயக்குனர் பத்மாவதி, தலைமை உரை ஆற்றினார்கள். பருத்தி ஆராய்ச்சி நிலைய தலைவர் மற்றும் பேராசிரியர் முனைவர் வீரபத்திரன், தென்னை சாகுபடியில்கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்களை பற்றி விரிவாக எடுத்துக் கூறினார். பேராசிரியர் தங்கபாண்டியன், தென்னை ரகங்கள் பற்றி அதன் சிறப்பு இயல்புகள் பற்றி எடுத்துக் கூறினார்.

மேலும், வேளாண் விற்பனை துறை வேளாண்மை அலுவலர் மகாலட்சுமி, தென்னையில் மதிப்பு கூட்டல் சம்பந்தமாக தென்னை விவசாயிகள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் குழுக் களுக்கு வழங்கப்படும் மானிய திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார். ராஜபாளையம் ஒழுங்குமுறை விற்பனை விற்பனைக்குழு கண்காணிப்பாளர் உமா மகேஸ்வரி, தென்னை கொள்முதல் மற்றும் முறை பற்றி ENAMS விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். மேலும் இயக்குனர் அறவாழி தென்னையில் மதிப்பு கூட்டல் தொழில் நுட்பங்கள் தென்னை மர காப்பீடு மற்றும் தென்னை மரம் ஏறும் தொழிலாளர்கள் காப்பீடு போன்ற வற்றை பற்றி விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துக் கூறினார். தென்னை வளர்ச்சி வாரத்தின் கள அலுவலர் முருகானந்தம், தென்னை வளர்ச்சி வாரியத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துக் கூறினார். மேலும் பல்வேறு சந்தேகங்களை கேட்டு அறிந்தனர். முடிவில் செயல் அலுவலர் பாரதி பிரியன் நன்றி கூறினார்.



# தென்னையில் மேம்படுத்தப்பட்ட இரகங்கள் மற்றும் வீரிய ஒட்டுகள்

நேற்றைய தொடர்ச்சி...

**வேப்பங்குளம் 3 (வி பி எம் –3)**

| | |
|---|---|
| வெளியிடப்பட்ட ஆண்டு | 1994 |
| பெற்றோர்கள் | அந்தமான் சாதாரணம் என்ற வெளிநாட்டு நெட்டை தென்னை யிலிருந்து தேர்வு செய்யப்படுகிறது |
| பூக்கும் வயது | 5½ ஆண்டுகள் |
| மகசூல் | 92 காய்கள் / மரம் / ஆண்டு |
| கொப்பரை எடை | 176 கிராம் / காய் |
| கொப்பரை விளைச்சல் | 16 கிலோ கொப்பரை / மரம் / ஆண்டு |
| எண்ணெய் சத்து | 70 சதம் |

**சிறப்பு குணாதிசயங்கள்**

- மானாவாரி மற்றும் இறவைக்கு ஏற்றது
- அதிக கொப்பரை எடை கொண்டது
- கிழக்கு கடற்கரை நெட்டையை விட 15 சதம் அதிக மகசூல்
- வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது

**வேப்பங்குளம் 4(வி பி எம் 4)**

இது மேற்கு கடற்கரை நெட்டையிலிருந்து தேர்வு செய்யப்பட்ட ரகமாகும். தமிழகத்தில் மானாவாரிலும் நீர்பாசன வசதி கொண்ட அனைத்து மாவட்டங்களிலும் பயிரிட ஏற்றது.

| | |
|---|---|
| வெளியிடப்பட்ட ஆண்டு | 2009 |
| பெற்றோர்கள் | மேற்கு கடற்கரை நெட்டை |
| பூக்கும் வயது | 58 மாதங்கள் |
| மகசூல் | 152 காய்கள் / மரம் / ஆண்டு |
| கொப்பரை மகசூல் | 3.6 டன் /எக்டர் |
| எண்ணெய் சத்து | 67.8 சதம் |

**சிறப்பு குணாதியங்கள்**

- தமிழகத்தில் மானாவாரியிலும் நீர்பாசன வசதி கொண்ட அனைத்து மாவட்டங்களிலும் பயிரிட ஏற்றது

**ஏஎல்ஆர் (சி என்) 1**

அரசம்பட்டி நெட்டை இரகத்தேர்வு ஆகும். தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் பயிர் செய்ய ஏற்றது. நடவு செய்த 5 ஆண்டுகளில் காய்ப்புக்கு வரும். சராசரியாக ஆண்டிற்கு மரத்திற்கு

145 காய்கள் கொடுக்கும்.இதன் கொப்பரை எடை 131 கிராம், எண்ணெய் அளவு 67 சதம் ஆகும். வறட்சியைத் தாங்கி வளரக் கூடியது.

### ஏஎல்ஆர்(சி என்) 2

திப்தூர் நெட்டை இரகத்தேர்வு ஆகும். தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் குறிப்பாக மானாவாரிக்கு ஏற்றது. நடவு செய்த 5 ஆண்டுகளில் காய்ப்புக்கு வரும். ஆண்டிற்கு மரத்திற்கு 110– 140 காய்கள் வரையில் கொடுக்கும். இதன் கொப்பரை மகசூல் எக்டருக்கு 2.57 டன், எண்ணெய் அளவு 64.7 சதம் ஆகும். வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது.

### குட்டை இரகங்கள்

குட்டை இனத்தைச் சேர்ந்த இரகங்கள் குறைந்த உயரம் வளரக் கூடியவை. தண்டுப்பகுதி மெல்லியதாகவும், கொண்டைப்பகுதி சிறியதாகவும் இருக்கும். நடவு செய்த 3 ஆண்டுகளில் காய்க்கத் துவங்கும். சுமார் 35 ஆண்டுகள் வரை பலன் தரக்கூடியது. காய்கள் சிறியதாக, உருண்டையாக பல வண்ணங்களில் உள்ளதால் வீடுகளில் முன்புறத்தில் அழகுக்காகவும், இளநீருக் காகவும் வளர்க்கப்படுகின்றன. இதன் கொப்பரை அளவு மற்றும் எண்ணெய் சத்து குறைவாக இருக்கும். காய்கள் சமையலுக்கு ஏற்றதல்ல. வறட்சியை தாங்காத இந்த இரகத்தில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் அதிகம் இருக்கும்.

### பிரபலமான குட்டை இரகங்கள்

குட்டை இரகங்கள் பெரும்பாலும் இளநீருக்காக சாகுபடி செய்யப் படுகின்றது. இவற்றுள் சௌகாட் பச்சை குட்டை, சௌகாட் ஆரஞ்சு




| MONTH | MONTHLY ADVANCE | GOLD RATE | OPTION 1 WEIGHT GM | OPTION 2 AMOUNT |
|---|---|---|---|---|
| 1 | 5000 | 4600 | 1.09 | 5000 |
| 2 | 5000 | 4750 | 1.05 | 5000 |
| 3 | 5000 | 4800 | 1.04 | 5000 |
| 4 | 5000 | 4900 | 1.02 | 5000 |
| 5 | 5000 | 5000 | 1.00 | 5000 |
| 6 | 5000 | 4900 | 1.02 | 5000 |
| 7 | 5000 | 4800 | 1.04 | 5000 |
| 8 | 5000 | 4700 | 1.06 | 5000 |
| 9 | 5000 | 4650 | 1.08 | 5000 |
| 10 | 5000 | 4550 | 1.10 | 5000 |
| 11 | 5000 | 4500 | 1.11 | 5000 |
| | | | 11.61 | 55000 |
| | | | TOTAL ACCUMULATED WEIGHT | TOTAL ACCUMULATED AMOUNT |

குட்டை, மலேயன் ஆரஞ்சு குட்டை, மலேயன் மஞ்சள் குட்டை, மலேயன் பச்சை குட்டை, கங்காபந்தம் பச்சை குட்டை மற்றும் கெந்தாளி ஆகியவை பிரபலமான இரகங்களாகும்.

**ஏஎல்ஆர் (சிஎன்) – 3**

இளநீருக்கு ஏற்ற ஆரஞ்சு நிற குட்டை இரகமாகும். கெந்தாளி குட்டை இரகத்திலிருந்து தேர்வு செய்யப்பட்டதாகும். ஆண்டிற்கு சராசரியாக 86 காய்கள் மகசூல் தரவல்லது. இளநீரின் அளவு 420 மிலி / காய், சர்க்கரையின் அளவு 5.2 சதம் மற்றும் இந்த இரகம் ஈரியோபைட் சிலந்தி தாக்குதலை தாங்கி வளரக்கூடியதாகும்.

**இளநீருக்கான இரகங்கள்**

குட்டை இன இரகங்களான சௌகாட் ஆரஞ்சு குட்டை, மலேசியன் ஆரஞ்சு குட்டை, மலேயன் மஞ்சள் குட்டை மற்றும் கங்காபந்தம் பச்சை குட்டை ஆகியவை இளநீருக்கு ஏற்றது. அவற்றில் சௌகாட் ஆரஞ்சு குட்டை மிகவும் உகந்தது.

**சௌகாட் ஆரஞ்சு குட்டை (COD)**

| | |
|---|---|
| காயின் நிறம் | கவர்ச்சியான ஆரஞ்சு |
| பூக்கும் வயது | 3½ ஆண்டுகள் |
| மகசூல் | 100 காய்கள் / மரம் / ஆண்டு |

**சிறப்பு குணாதிசயங்கள்**

- மொத்த சர்க்கரை சத்து 6.0 சதம்
- கரி ஊட்டம் குறைந்த சர்க்கரை 3.5 சதம்
- பொட்டாசியம் (2050 பிபிஎம்)
- குறைந்த சோடியம் (18 பிபிஎம்) அதிக உயிர்ச்சத்து
- அதிக தாதுப்பொருட்கள் மற்றும் சுவைகாரணி (7.8)
- 300-350 மில்லி நீர்/ காய். இளநீர் இனிப்பானது.

**வீரிய ஓட்டு இரகங்கள்**

நெட்டை மற்றும் குட்டை இரகங்களை கருஓட்டு செய்து உருவாக்கப்படும் இரகங்கள் வீரிய ஒட்டு இரகங்கள் ஆகும். 3 முதல் 4 ஆண்டுகளில் காய்க்கத் துவங்கும் இந்த இரகங்களுக்கு தீவிர பராமரிப்பு அவசியம். நல்ல வடிகால் வசதி கொண்ட நிலங்களில் பாசன வசதியடன் சாகுபடி செய்ய வேண்டும். அதிக மகசூலும் கொப்பரை அளவும் கொண்ட இந்த இரகம் வறட்சியைத் தாங்காது. பூச்சி மற்றும் நோய்த்தொல்லை அதிகம் காணப்படும்.

தென்னையில் அதிக மகசூல் பெற நெட்டைக்கும், குட்டைக்கும் இடையே கருவொட்டு முறை 1970ல் தொடங்கப்பட்டு இதுவரை மூன்று நெட்டை x குட்டை வீரிய ஒட்டுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தியாவில் முதல் வீரிய ஒட்டு தென்னையை வெளியிட்ட பெருமை வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலையத்தை சாரும். 1982 ஆம் ஆண்டு வி.எச்.சி 1 என்ற பெயரில் முதல் நெட்டை x குட்டை வீரிய ஒட்டு வெளியிடப்பட்டது.

**நெட்டை x குட்டை மற்றும் குட்டை x நெட்டை ஒட்டு கன்றுகள்**

நெட்டை ரகத்தை தாயாகவும் குட்டை ரகத் தென்னையை தந்தை யாகவும் வைத்து மகரந்தச் சேர்க்கை மூலம் இணைத்து உருவாக்கும் ஒட்டுக்கன்றை நெட்டை x குட்டை (TXD) ஒட்டுக் கன்று எனவும் குட்டை ரகத்தை தாயாகவும், நெட்டைரகத் தென்னையை தந்தையாகவும் கொண்டு மகரந்த சேர்க்கையின் மூலம் இணைத்து உருவாகும் கன்றை குட்டை x நெட்டை (DXT) ஒட்டு கன்று எனவும் அழைக்கின்றோம். நீண்ட கால காய்ப்பிற்கு நெட்டை X குட்டை (TXD) ஒட்டுக் கன்றுகளே சிறந்தது என அறிய முடிகின்றது.

**1. வேப்பங்குளம் வீரிய ஒட்டு தென்னை1 (வி எச் சி 1)**
(இந்தியாவில் வெளியிடப்பட்ட முதல் வீரிய ஒட்டு தென்னை)

| | |
|---|---|
| வெளியிடப்பட்ட ஆண்டு | 1982 |
| பெற்றோர்கள் | கிழக்கு கடற்கரை நெட்டை x பச்சை குட்டை |
| பூக்கும் வயது | 3டி ஆண்டுகள் |
| மகசூல் | 120 காய்கள் / மரம் / ஆண்டு |
| கொப்பரை எடை | 142 கிராம் / காய் |
| கொப்பரை விளைச்சல் | 14 கிலோ கொப்பரை / மரம் / ஆண்டு |
| எண்ணெய் சத்து | 69 சதம் |

**சிறப்பு குணாதிசயங்கள்**

- நெட்டை இரகங்களை காட்டிலும் 38 சதம் அதிக மகசூல்
- கொப்பரை, எண்ணெய் சதம் அதிகம்
- குறுகிய காலத்தில் பூக்கும் தன்மை

இதில் ஆரம்ப காலங்களில் மட்டை தொங்குதல், குலை முறிதல் போன்ற சில குறைபாடுகள் காணப்பட்டது. ஆனால் காலப்போக்கில் தானகவே இக்குறைபாடுகள் நிவர்த்தியாயின.

**2. வேப்பங்குளம் வீரிய ஒட்டு தென்னை 2 (வி எச் சி 2)**

| | |
|---|---|
| வெளியிடப்பட்ட ஆண்டு | 1988 |
| பெற்றோர்கள் | கிழக்கு கடற்கரை நெட்டை மு மலேயன் மஞ்சள் குட்டை |
| பூக்கும் வயது | 3½ ஆண்டுகள் |
| மகசூல் | 142 காய்கள்/ மரம் / ஆண்டு |

| | |
|---|---|
| கொப்பரை எடை | 149 கிராம் /காய் |
| கொப்பரை விளைச்சல் | 22 கிலோ கொப்பரை/ மரம் / ஆண்டு |
| எண்ணெய் சத்து | 70 சதம் |

**சிறப்பு குணாதிசயங்கள்**

- வி.எச்.சி 1 ஐ விட அதிக காய்கள், கொப்பரை எடை மற்றும் எண்ணெய் சத்து
- கிழக்கு கடற்கரை நெட்டையைவிட 55 சதம் அதிக காய் மகசூல்
- மட்டை மற்றும் குலை சரியாத்தன்மை

**3. வேப்பங்குளம் வீரிய ஒட்டு தென்னை3 (வி எச் சி 3)**

| | |
|---|---|
| வெளியிடப்பட்ட ஆண்டு | 2000 |
| பெற்றோர்கள் | கிழக்கு கடற்கரை நெட்டை x மலேயன் ஆரஞ்சு குட்டை |
| பூக்கும் வயது | 3½–4 ஆண்டுகள் |
| மகசூல் | 157 காய்கள் / மரம் / ஆண்டு |
| கொப்பரை எடை | 162 கிராம் / காய் |
| கொப்பரை விளைச்சல் | 25.4 கிலோ கொப்பரை / மரம் / ஆண்டு |
| எண்ணெய் சத்து | 70 சதம் |

**சிறப்பு குணாதிசயங்கள்**

- வி.எச்.சி 2 வீரிய ஒட்டை விட 9 சதம் அதிக மகசூல்
- கிழக்கு கடற்கரை நெட்டையைவிட 67 சதம் அதிக காய் மகசூல்
- 19.7 சதம் அதிக கொப்பரை மகசூல்
- மட்டை மற்றும் குலை சரியாத்தன்மை

**பல்வேறு நாடுகளில் காணப்படும் மாறுப்பட்ட தென்னை வகைகள்**

1. குட்டை பச்சை
2. ஆயிரம் காய்ச்சி
3. சவுகாட் ஆரஞ்சு குட்டை
4. மலேசியா மஞ்சள் குட்டை
5. மலேசியா ஆரஞ்சு குட்டை
6. மலேசியா பச்சை குட்டை
7. ஸ்பைகேட்டா
8. லட்சத்தீவு மைக்ரோ
9. லட்சத்தீவு இளம் சிவப்பு
10. கொச்சின் சைனா நெட்டை
11. அந்தமான் குட்டை பச்சை
12. ஜாவா ஜயண்ட்

13. கப்படம்
14. மேற்கு கடற்கரை நெட்டை
15. பிரிட்டிஸ் சாலமன் ஜெய்ண்ட்
16. ஜான்ஸிபார்
17. செயிண்ட் வின்செண்ட்
18. சிசெல்ஸ்
19. தாய்லாந்து
20. கென்யா நெட்டை
21. அந்தமான் சாதாரண நெட்டை
22. ஸ்ட்ரைட் செட்டில்மெண்ட் பச்சை
23. ஜமைக்கா நெட்டை
24. மலேசிய நெட்டை
25. சான் பிளாஸ்
26. சான்ரமான்
27. கங்காபந்தம்
28. பிலிப்பைன்ஸ் சாதா நெட்டை
29. கோவா நெட்டை
30. சயாம் நெட்டை
31. லட்சத்தீவு சாதாரண நெட்டை
32. கிழக்கு கடற்கரை நெட்டை
33. அந்தமான் ஜயன்ட்
34. நியூகினியா நெட்டை
35. நைஜிரியன்
36. அரசம்பட்டி நெட்டை
37. டிப்த்தூர் நெட்டை
38. பிஜி ரொட்டுரா
39. பிலிப்பைன்ஸ் லோனோ
40. குவாம்
41. அந்தமான் ஆரஞ்சு குட்டை
42. சௌகாட் பச்சை குட்டை
43. பெடரேட்டட் மலேசியன் ஸ்டேட்ஸ்

இதனை, இரா.ஜெகதாம்பாள், மா.இரவி, சி.பிரதிபா மற்றும் செ.பிரபாகரன், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகம், வேளாண்மை அறிவியல் நிலையம், மாவட்ட வேளாண் வானிலை மையம் (DAMU) சந்தியூர், சேலம் மாவட்டம் தெரிவித்தனர்.

**மேலும் விபரங்களுக்கு, திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம் (KVK), சந்தியூர், சேலம் – 636 203, 0427 – 2422550 தொடர்பு கொள்ளலாம்.**

**முற்றும்.**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# விதையின் ஈரப்பதம் மற்றும் விதை பரிசோதனையின் அவசியம்

பெரம்பலூர், அக்.7

விதை ஈரப்பதம் என்பது விதையானது ஈர்த்து வைத்து தண்ணிரின் அளவு ஆகும். விதையின் ஈரப்பதம் ஒரு விதையின் முளைப்புத்திறன், பூச்சி தாக்குதல் மற்றும் அதிகபட்ச சேமிப்பு காலம் ஆகியவற்றை நிர்ணயம் செய்கிறது. விதையின் ஈரப்பதம் மிகக் குறைவான நிலையில் இருந்தாலும், மிக அதிகம் இருந்தாலும் விதையின் முறைப்புதிறன், சேமிப்பு கால அளவு, பூஞ்சானம் மற்றும பூச்சி தாக்குதல் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, விதையின் ஈரப்பதத்தை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அளவில் சேமித்து வைக்க வேண்டும். விதையின் ஈரப்பதம் அதிகரிக்கும் போது விதையின் தரத்தை முடிவு செய்யும் முக்கிய காரணியான, விதை முளைப்புத் திறன் குறையும்.

ஒவ்வொரு பயிரின் விதை ஈரப்பதம் அப்பயிருக்கு ஏற்றவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நெல் 13 சதவீதம், சிறுதானியங்கள் 12 சதவீதம், பயறு வகைகள் 9 சதவீதம், நிலக்கடலை, எள், சூரிய காந்தி தலா 9 சதவீதம், ஆமணக்கு 8 சதவீதம், பருத்தி 10 சதவீதம் என விதை பயன்பாட்டிற்கான அதிகபட்ச விதை ஈரப்பத சதவீதம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் தற்போது அறுவடை செய்யபட உள்ள பயிர்களின் விதைகளை நன்கு உலர்த்தி விதையின் ஈரப்பதத்தை மேற்குறிப்பிட்ட அளவிற்குள் சேமித்து வைத்து கொள்ள வேண்டும்.

விதையின் ஈரப்பதம் மற்றும் முளைப்புத்திறனை அறிந்து கொள்ள மாவட்ட விதைப்பரிசோதனை நிலையத்தை தொடர்பு கொண்டு பயனடைலாம். பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டத் திற்கான விதை பரிசோதனை நிலையமானது பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் மாவட்ட மைய நூலகம் மேல் புறத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்தில் விதையின் தரம் அறிய நிர்ணய காரணிகளான முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் பிற ரக கலப்பு ஆகியவை ஆய்வு செய்யப்படுகின்றன.

விதைப்பரிசோதனை நிலையத்தில் ஒரு பணி விதை மாதிரிக்கு ரூ.80/- பரிசோதனை கட்டணமாக செலுத்தி பயிர் மற்றும் இரகம், குவியல் எண் ஆகியவை குறித்த விபர சீட்டுகளுடன், விதைகளை அனுப்பி பரிசோதனை செய்து கொள்ளலாம். ஆய்வறிக்கை முடிவு விவசாயிகளின் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். இத்தகவலை பெரம்பலூர் விதை பரிசோதனை நிலையத்தின் வேளாண்மை அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

# இராமநாதபுர மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனைகள்

இராமநாதபுரம், அக்.7

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, இன்று முதல் 11ம் தேதி வரையிலான நாட்களில், லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலையானது 33 முதல் 35 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலையானது 24-26 டிகிரி செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். காற்றின் ஈரப்பதம் சராசரியாக 20 முதல் 70 சதவீதம் வரை இருக்கக்கூடும். வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 12 முதல் 16 கிலோ மீட்டர் வேகத்தில் தெற்கு திசையில் இருந்து வீசக்கூடும்.

விவசாயிகள் பெய்யக்கூடிய மழையை பயன்படுத்தி நிலங்களை உழவு செய்யுமாறு அறிவுறுத்தப்படுக்கின்றனர். விவசாயிகள் கடைசி உழவின்போது ஒரு ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம் இடுமாறு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் பண்ணைக் குட்டைகள் மற்றும் நீர் நிலைகளை சரி செய்து மழை நீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். மானாவாரி விவசாயிகள் நெல் சாகுபடியை மேற்கொள்ளும் பட்சத்தில் குறுகிய கால மற்றும் வறட்சியை தாங்கி வளரும் திருர்குப்பம் 15, ஆடுதுறை 53, கோயம்புத்தூர் 53 மற்றும் கோயம்புத்தூர் 55 போன்ற ரகங்களை விதைத்து பயன்பெறலாம். விவசாயிகள் மானாவாரி நேரடி நெல் விதைப்பு செய்யும் பட்சத்தில் விதையை கடினப்படுத்தி விதைக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். விதை கடினப்படுத்த ஒரு கிலோ விதையை ஒரு சதவிகித பொட்டா சியம் குளோரைடு சமவிகித கரைசலில் (10 கிராம், ஒரு லிட்டர் நீர் என்ற அளவில்) 16 மணி நேரம் ஊற வைத்து பின் அதன் பழைய ஈரப்பத்திற்கே திரும்பும் வரை நிழலில் உலர்த்த வேண்டும். கடின படுத்தப்பட்ட விதைகளை நேரடி நெல் விதைப்பு செய்யும் பட்சத் குதில் இயந்திர விதைப்பானை பயன்படுத்துவதால் சரியான ஆழத் திலும் சரியான இடைவெளியை பராமரிப்பதன் வாய்ப்பையும், வறட்சியின் காரணமாக ஏற்படும் பயிர் இழப்பு களை குறைப்ப தற்கான வாய்ப்புள்ளது.

தற்பொழுது நிலவி வரும் பருவ சூழ்நிலையில் தென்னையில் தென்னையில் சிவப்பு கூண்வண்டு தாக்குதல் பரவலாக தென் படுகிறது. இதனை கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட பகுதிகளில் இமிடா குளோபிரிட் 17.8 சதம் எஸ்.எல் 1 மில்லி உடன் 1 மில்லி தண்ணீர் கலந்து செலுத்தவும்.

மேலும் தென்னையில் காண்டாமிருக வண்டு பாதிப்பை தடுக்க நடுக்குருத்து பாகத்தில் மட்டை இடுக்குகளில் 3 அல்லது 4 அளவு உள்ள அந்து உருண்டையை இட்டு மணலால் மூடவும் இதனை 45 நாட்களுக்கு ஒரு முறை இளம் கன்றுகளுக்கு மட்டை இடுக்குகளில் வைப்பதன் மூலம் பாதிப்பை கட்டுபடுத்தலாம் என வேளாண் அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் ச.வள்ளல் கண்ணன், தொழில் நுட்ப வல்லுநர் ம.வெங்கடேஸ்வரி மற்றும் வானிலை கண்காணிப்பாளர் மா.ராஜேஸ்கண்ணன் அறிவுறுத்து கின்றனர்.

# பெருந்துறை வட்டாரத்தில் ஒருங்கிணைந்த பண்ணையம் பற்றிய விவசாயிகள் பயிற்சி

ஈரோடு, அக்.7

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டாரம், வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் வாயிலாக செயல்படுத்தப் படும் மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 2023-2024 ஆம் ஆண்டுக்கான கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட பாப்பம்பாளையம் வருவாய் கிராமத்தில் 27.9.23 அன்று நடைபெற்றது. இதில் பெருந்துறை வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) சி.சசிகலா தலைமை தாங்கி கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் பற்றியும் துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் மானிய விபரங்களை பற்றி சிறப்புரையாற்றினார்.

மேலும் வேளாண்மை அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் பிரேமலதா, பேசுகையில், ஒருங்கிணைந்த பண்ணையத்தில் வருவாய் தரக்கூடிய கறவை மாடு வளர்ப்பு மற்றும் மண்புழு உரம் தயாரித்தல் முறை குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். மேலும் தேனீ வளர்ப்பாளர் அண்ணாமலை, பேசுகையில் தேனீ வளர்ப்பு முறை அவற்றால் ஏற்படும் நன்மைகள் குறித்தும், தேனீ பூச்சிகளை கையாளும் முறை குறித்த தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். உதவி வேளாண்மை அலுவலர் கலைச்செல்வி, பேசுகையில் உழவன் செயலி பதிவிறக்கம் பற்றிய விவரங்களை கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் விசுவநாதன் மற்றும் தாமோதரன் அட்மா திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் உழவன் செயலி பதிவிறக்கம் செய்தல் மற்றும் அவற்றை பயன்படுத்தும் முறை குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.